## பாடம்- 25 பொன் கன்றுக்குட்டி (யாத் 32)

உங்கள் மீது அன்பாக இருப்பவரிடம், அவர் மீது உள்ள பயத்தினால் எப்போதாவது பொய் சொல்லி இருக்கிறீர்களா? அல்லது சூழ்நிலையை சமாளிக்கும்படி உங்களை காப்பாற்றிக் கொள்ள, மற்றவர்கள் முன்பு அவமானப்படாமல் இருக்க சில உண்மைகளை மறைத்திருக்கிறீர்களா? அப்படியானால், இன்றைய பாடத்தில் என்ன நடந்தது என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும்.

மோசே தேவனோடு மலையிலே இருந்த போது, ஜனங்கள் ஆரோனின் பொறுப்பிலே இருந்தார்கள். மோசே மலையிலே நீண்ட நாள் தங்கியிருந்ததால், இஸ்ரவேல் ஜனங்கள் தாங்கள் எகிப்திலே வழிபட்டது போல ஒரு காணக்கூடிய தெய்வம் வேண்டும் என ஆரோனை மிகவும் தொல்லைபடுத்தினார்கள். எனவே, ஆரோன் பயத்தினால் ஜனங்களின் விருப்பத்திற்கு இணங்கி, பின் மோசே அவனிடம் அதை பற்றி கேட்ட போது ஒரு பொய்யான கதையை சொன்னான்.

மோசே, தேவனுடன் நாற்பது நாட்கள் மலையிலே தங்கியிருந்தான். ஜனங்கள் அமைதியை இழந்து, தங்களை அடிமைதனத்திலிருந்து விடுவித்து, தங்களுடன் உடன்படிக்கை செய்த தேவனை மறந்து கலகம் பண்ணினார்கள். அவர்கள் எல்லாரும் ஆரோனிடத்தில் வந்து, “எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக் கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம். ஆதலால் நீர் எங்களால் காணக்கூடிய, எங்களுக்கு முன் செல்லும் தெய்வத்தை உண்டுபண்ணும்” என்றார்கள்.

தேவன் தங்களுக்கு செய்த நன்மைக்கான புகழை மோசேக்கு கொடுத்ததும் அல்லாமல், நியாயபிரமாணத்தின் இரண்டாவது கட்டளையான ‘யாதொரு சொரூபங்களையாகிலும், விக்கிரகங்களையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்’ என்பதையும் அப்பட்டமாக மீறினார்கள்.

எனவே ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளிலிருந்த பொன்னனிகளைக் கழற்றி ஆரோனிடம் கொடுத்த போது அவன் அதை

உருக்கினான். பின்னர் அவன் அந்த பொன்னை ஒரு கன்றுக்குட்டியாக உண்டாக்கினான். ஜனங்கள் எல்லாரும், ‘‘எங்களை எகிப்திலிருந்து அழைத்து கொண்டு வந்த தெய்வம் இதுவே’’ என சந்தோஷப்பட்டார்கள். எனவே ஆரோன் அந்த கன்றுக்குட்டியின் முன்பாக ஒரு பலிபீடத்தை கட்டி, ’கர்த்தருக்கு பண்டிகை’ என அறிவித்தான்.

ஒரே உண்மையான தேவனுக்கு, ஒரு விக்கிரகத்தின் முன்னால் பலி செலுத்துவதை குறித்து அவர்களால் எப்படி யோசிக்க முடிந்தது? ஆனால் இதைதான் அப்படியே செய்தார்கள். அவர்கள் அதற்கு சர்வாங்க தகனபலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்தி அந்த விக்கிரகத்திற்கு படைக்கப்பட்டதை புசிக்கவும், குடிக்கவும் உட்கார்ந்தார்கள்.

இதை பவுல் தான் எழுதியபோது பின்வருமாறு குறிப்பிடுகிறார். ‘ஜனங்கள் புசிக்கவும், குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிறபடி அவர்களில் சிலர் விக்கிரக ஆராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள்’ (1 கொரி 10-7) என்கிறார்.

மலையிலே தேவனுக்கு கீழே என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பது தெரியும். அவர் மோசேயிடம், ‘‘நீ எகிப்திலிருந்து நடத்திக்கொண்டு வந்த உன் ஜனங்களிடத்திற்கு போ. அவர்கள் தங்களை கெடுத்துக்கொண்டு, அவர்களுக்கு நான் விதித்த வழியை சீக்கிரமாய் விட்டு விலகினார்கள். அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக் குட்டியை வார்ப்பித்து அதற்கு பலியிட்டு, பணிந்து கொண்டார்கள்.

இப்போது நான் இவர்களை அழித்து போட நீ என்னை விட்டுவிடு. உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன்’’ என்றார்.

அதற்கு மோசே, தேவனிடம், ‘‘தேவரீர் மகா பலத்தினாலும், வல்லமையுள்ள கையினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படபண்ணின உம்முடைய ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றியெறிவதென்ன?

இப்போது நீர் அவர்களை அழித்தீரானால், அவர்களை கொன்று போடவே அழைத்து வந்தீர் என எகிப்தியர் சொல்லி நகைப்பார்களே. ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும் யாக்கோபிற்கும் நீர் கொடுத்த வாக்குதத்தத்தை நினைத்தருளும். உங்கள் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போல பெருகப்பண்ணி நான் சொன்ன தேசம் முழுவதையும் உங்கள் சந்ததியார் சுதந்தரித்து கொள்வார்கள் என்று சொன்னீரே'' என்று கெஞ்சினான்.

எனவே கர்த்தர் மோசேக்கு செவிகொடுத்து ஜனங்களுக்கு தீங்கை செய்யாதபடிக்கு பரிதாபம் கொண்டார்.

பின்பு மோசே, தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட இரண்டு சாட்சி பலகைகளோடு மலையிலிருந்து கீழே இறங்கினான். அவன் கன்றுக்குட்டியையும், ஜனங்கள் ஆரவாரம் பண்ணுகிறதையும் கண்டு மிகுந்த கோபம் கொண்டான். இஸ்ரவேல் மக்கள் தேவனுடன் செய்த உடன்படிக்கையை உடைத்தது போல மோசே தன் கையிலிருந்த இரண்டு சாட்சி பலகைகளையும் கீழே எறிந்து உடைத்தான்.

அது சிறு துண்டுகளாக நிலத்திலே சிதறியது. அவன் அந்த கன்றுக்குட்டியை அக்கினியால் சுட்டெரித்து அதை பொடியாக அரைத்து பின்பு அதை தண்ணீரின் மேல் தூவி, அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்தான்.

மோசே, ஆரோனிடம் அதிகாரத்தோடு, "நீ இந்த ஜனங்கள் மேல் இந்த பெரும்பாவத்தை சுமத்துகிறதற்கு இவர்கள் உனக்கு என்ன செய்தார்கள்?'' என்றுக் கேட்டான். அதற்கு ஆரோன், ''என் ஆண்டவனுக்கு என்மேல் கோபம் மூளாதிருப்பதாக. இது பொல்லாத ஜனம் என்று நீர் அறிந்திருக்கிறீர். அவர்கள் தங்களுக்கு ஒரு தெய்வத்தை உண்டாக்க வேண்டும் என வற்புறுத்தினார்கள். நான் அவர்களிடத்தில் பொன்னை தரும்படி கேட்டேன். அதை அக்கினியிலே போட்ட போது, அதிலிருந்து இந்தக் கன்றுக்குட்டி வந்தது'' என்றான்.

தன் மீது உள்ள பாவத்தை ஒப்புக்கொள்ளாமல் ஆரோன் தன்னை காப்பாற்றிக் கொள்ள, தன்னை தவிர மற்ற எல்லார் மீதும் பழிசுமத்தினான்.

பிறகு, மோசே பாளயத்தின் வாசலிலே நின்றான். அப்பொழுதும், ஜனங்கள் எப்படி கட்டுப்பாட்டில்லாமல் காட்டுத்தனமாக ஓடி வருகிறார்கள் என்பதை அவன் கண்டான். எனவே அவன், ‘‘கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் என்னிடத்தில் வந்து நில்லுங்கள்’’ என கூச்சலிட்டான். அப்பொழுது லேவியின் புத்திரர் எல்லோரும் மற்ற ஜனங்களை விட்டு பிரிந்து மோசேயினிடத்தில் கூடிவந்தார்கள்.

லேவி புத்திரர் ஒவ்வொருவனும் தன் பட்டயத்தை தன் அரையிலே கட்டிக்கொண்டு, மோசேயுடன் நிற்க மறுத்த ஜனங்களை கொன்று போடும்படி கர்த்தர் கட்டளையிட்டார். அந்த நாளிலே ஜனங்களில் ஏறக்குறைய மூவாயிரம்பேர் விழுந்தார்கள். தங்களுடைய கீழ்படிதலினால் லேவியர்கள் தேவனால் ஆசிர்வதிக்கப்பட்டு, ஆசாரியருக்கு உதவியாளராக தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

மறுநாள் மோசே ஜனங்களிடம், ‘‘நீங்கள் மகா பெரிய பாவஞ்செய்தீர்கள். உங்களுக்காக பாவநிவர்த்தி செய்யக் கூடுமோ என்று அறிய இப்பொழுது கர்த்தரிடத்திற்கு ஏறிப் போகிறேன்’’ என்றான். அத்துடன் மோசே அங்கிருந்து கிளம்பி மீண்டும் மலைக்கு போனான்.

அவன் தேவனிடம், ‘‘ஐயோ! இந்த ஜனங்கள் மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள். பொன்னினால் தங்களுக்கு தெய்வங்களை உண்டாக்கினார்கள். தயவு செய்து அவர்கள் பாவத்தை மன்னித்தருளும், இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புத்தகத்திலிருந்து என் பேரை கிறுக்கிப்போடும்’’ என்றான்.

அதற்கு கர்த்தர், ‘‘எனக்கு விரோதமாக பாவம் செய்தவன் எவனோ, அவன் பேரை என் புத்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன். இப்பொழுது நீ போய், நான் உனக்கு சொன்ன இடத்திற்கு ஜனங்களை அழைத்துக் கொண்டு போ. என் தூதனானவர் உனக்கு முன் செல்லுவார். ஆகிலும் நான் விசாரிக்கும் நாளில் அவர்களுடைய பாவத்தை அவர்களிடத்தில் விசாரிப்பேன்’’ என்றார்.

ஆரோன் செய்த கன்றுக்குட்டியை ஜனங்கள் சேவித்ததின் நிமித்தம் கர்த்தர் அவர்களை உபாதித்தார்.

தேவன், மோசேயின் வேண்டுகோளை நிராகரித்தார். ஏனென்றால் அவனவன் செய்த பாவத்திற்கு அவனவனே பொறுப்பு ஏற்க வேண்டும். (உபா 24:16) தேவனால் தனக்கும், இஸ்ரவேலருக்கும் இடையே மத்தியஸ்தனாக நியமிக்கப்பட்ட மோசே தன்னை இஸ்ரவேல் ஜனங்களுடன் ஐக்கியப்படுத்தி, அவர்கள் செய்த தவறுக்கான தண்டனையை தானே ஏற்றுக்கொண்டு தன்னை தேவன் அழிக்கும்படி பரிந்துபேசுகிறான்.

அப்படி மோசே தன்னை ஜனங்களுக்கு அர்ப்பணித்து தண்டனையை ஏற்றுக்கொள்ள முன்வந்த இந்த செயல், பின்நாளில் இயேசுகிறிஸ்து ஜனங்களின் பாவங்களுக்கு தன்னை ஒப்புக் கொடுத்தற்கு முன்னடையாளமாக இருக்கிறது.

இந்த பாடம் மிகவும் முக்கியமானது ஏனென்றால் இது தேவன் தன் மக்களிடத்தில் எதிர்பார்க்கின்ற பரிசுத்தத்தையும் அவர்கள் பாவத்தில் விழுந்த போது, அவர்கள் மீது அவருடைய அன்பையும் காட்டுகிறது.

இந்த பாடத்தின் முக்கியமான உண்மை என்னவென்றால் தேவன் பாவிகளை நேசிக்கிறார். ஆனால் அவர்கள் தொடர்ந்து செய்கின்ற பாவங்களைத்தான் வெறுக்கிறார்.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்

1. ஏன் தேவன், மோசேயிடம் மலையிலிருந்து கீழே இறங்கச் சொன்னார்? (5 வினாடிகள் நிற்கவும்)

    தேவன், **“**அவர்கள் தங்களை கெடுத்துக் கொண்டு**,** அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்” என கூறினார் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. இஸ்ரவேல் ஜனங்கள் செய்த மகா பெரிய பாவம் என்ன? (5 வினாடிகள் நிற்கவும்)

அவர்கள் ஒரு பொன் கன்றுக்குட்டியை வார்பித்து அதற்கு பலியிட்டு அதை பணிந்து கொண்டார்கள் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. மோசே கர்த்தரைப் பின்பற்றும்படி ஜனங்களை அழைத்த போது லேவி புத்திரர் என்ன செய்தார்கள்? (5 விநாடிகள் நிற்கவும்)

'லேவி புத்திரர் எல்லோரும் மற்ற ஜனங்களை விட்டு பிரித்து மோசேயினிடத்தில் கூடி வந்தார்கள்' என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

4. மோசே தேவனின் கோபத்தை தணிக்க என்ன செய்ய ஆயத்தமாயிருந்தான்? (5 விநாடிகள் நிற்கவும்)

'தேவனுடைய புத்தகத்திலிருந்து தேவன் தன் பெயரை கிறுக்கிப் போடவும் முன் வந்தான்' என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள்.

பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்த பாடத்தை யாராவது ஒருவரிடம் கூறி, மோசே இந்த பொன்கன்றுக்குட்டி ஏன் செய்யப்பட்டது? என ஆரோனிடம் கேட்டபோது, ஏன் அவன் பொய் சொன்னான? என கேட்கவும். ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் இப்படிப்பட்ட பொய்களை சொல்லக் கூடிய நடத்தைக்கான பிறப்பிடம் எது?

இதற்கான பதில்களாக இருக்கும் எதிரியின் சோதனை, பயம், சுயபாதுகாப்பு, ஆவிக்குரிய வாழ்க்கையில் ஏற்படும் இழப்பு மற்றும் தன்னை காப்பாற்றிக் கொள்ளுதல் ஆகியவற்றை குறித்து கலந்து ஆலோசியுங்கள்.

இப்படிபட்ட நிர்பந்தங்களை ஒரு விசுவாசி சந்திக்கும் போது அவர்கள் என்ன செய்ய வேண்டும்? சங்கீதகாரனாகிய தாவீது இவ்வாறாக எழுதுகிறார். 'தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்' (சங் 46-1). எனவே நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் உதவிக்காக தேவனை நோக்கி கூப்பிட வேண்டும்.

பாடம் முடிந்தது